28th March 1963]

கூட்டுப் பட்டாவிலிருந்து பிரிந்து போகவேண்டும் என்று சொன்னால், அந்த விஷயத்தில் அரசாங்கம் தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டும் என்ற நிலைமை இப்பொழுது இருக்கிறது.

திரு. சி. பொன்னுசாமி : கூட்டுப் பட்டாக்கள் கொடுப்பதற்கு என்ன காரணம்? சர்க்காரே முன் வந்து தனிப்பட்டா கொடுக்க மாவட்டத் தலைவர்களுக்கு உத்தரவு போட முன் வருமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : நான் முன்பு ஒரு உப கேள்விக்குப் பதில் சொன்னேன். இதிலே ஏராளமான சிக்கல்கள் இருக்கின்றன. பாத்திய உரிமைகள் பல பேருக்குப் பல வகைகளில் இருக்கின்றன. எனவே, சென்னையிலிருந்து ஒரு உத்தரவைப் போட்டு, அதன்படி கொடுக்க வேண்டுமென்று சொல்லுவதற்கு நான் தயாராக இல்லை. கூட்டுப் பட்டாவிலிருந்து பிரிந்து போக வேண்டுமென்று சொல்லுகிறவர்கள் மனுக் கொடுத்தால், அதைத் தீவிரமாக பரிசீலனை செய்ய வேண்டும் என்பதுதான் இப்பொழுது இருக்கக்கூடிய முடிவு.

போக்குவரத்து நெருக்கடி (தாம்பரம்)

* 405 கேள்வி.—திரு. முனு. ஆதி : கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தாம்பரம் அருகில் இரும்புலியூர் வழியாகச் செல்லும் பெருஞ்சாலை, ரயில் பாதையை கடக்கும் இடத்தில் மிகவும் குறுகியதாக இருப்பதால், காலை, மாலை, இரு வேளைகளிலும் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதை அரசாங்கம் அறியுமா?

(இ) அந்நெருக்கடியை நீக்கும் வகையில் தகுந்த நடவடிக்கை எடுக்கும் உத்தேசமுண்டா?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The Government of India were urged to sanction the scheme for the construction of an overbridge at the site during the Third Five-Year Plan. They have intimated that in view of the acute shortage of funds for National Highways Works due to additional commitments on various urgent schemes necessitated in the present National Emergency, the work has been post-poned.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த இரும்புலியூர் லெவல் கிராஸிங் எல்லா மாவட்டங்களையும் இணைக்கிற ரோட்டில் இருப்பதினாலும், தலைநகர் நுழை வாயிலாக இருக்கிற காரணத்தினாலும், இதைத் தாமதப்படுத்தாமல், துரிதப்படுத்துவதற்கு சர்க்கார் முயற்சி எடுக்குமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து தான் இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறது. இப்பொழுது இருக்கக்கூடிய நெருக்கடி

[28th March 1963

நிலைமையை ஒட்டியும் நாஷனல் ஹைவேஸ் வேலைகளுக்கான நிதி நிலைமையையும் மனதில் வைத்துக்கொண்டு, இதைத் தள்ளிப் போட்டு விடலாம் என்ற முடிவுக்கு அரசாங்கம் வந்திருக்கிறது.

அணை கட்டுதல் (ஈரோடு வட்டம்)

*406 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம்: கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் ஈரோடு வட்டத்திலுள்ள குரங்கன் ஓடையில் அணை கட்டுவது பற்றிப் பரிசீலனை நடந்ததா?

(இ) அணை கட்டித் தேக்கி புதிய வாய்க்கால் வெட்டுவதன் மூலமாக எத்தனை ஏக்கருக்குப் பாசன வசதி கிடைக்கும்?

(உ) இதற்காகும் உத்தேசச் செலவென்ன?

(எ) அணை கட்டும் இடத்திலும், வாய்க்கால் வெட்டுவதிலும் சேதமாவது எத்தனை ஏக்கர்?

(ஐ) அணைகட்டும் வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

THE HON. SRI V. RAMAIAH: (a) to (e) A scheme is under investigation and only after the investigation is over, other particulars can be furnished.

குழாய்க் கிணறுகள் (உடையார்பாளையம் வட்டம்)

*407 கேள்வி.—திரு. இரா. நாராயணன்: கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உடையார்பாளையம் வட்டம், மணப்பத்தூர் மற்றும் பக்க கிராமங்களில் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய ஆழக் குழாய் கிணறுகள் அமைக்க அரசாங்கத்திற்கு மனு ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மேல் எடுத்த நடவடிக்கை என்ன?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) மணப்பத்தூர் கிராமப் பஞ்சாயத்துத் தலைவரிடமிருந்து இது விஷயமாக 1962 ஜூன் மாதத்தில் மகஜர் ஒன்று பெறப்பட்டது.

(இ) பவர் டிரில் (Powerdrill) யந்திரங்கள் கிடைக்காததால், குழாய்க் கிணறுகள் தோண்டும் திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை. எனவே, நீர் ஊற்றுக் கிணறுகள் திட்டத்தின்கீழ் கிடைக்கும் கடன் வசதிகளைப் பயன்படுத்திக்கொண்டு நீர் ஊற்றுக் கிணறுகளைத் தோண்ட விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும்படி பஞ்சாயத்துத் தலைவருக்கு அறிவிக்கப்பட்டது.

(a) A representation was received in June 1962 from the President, Manapattur Village Panchayat.

(b) As the scheme for sinking of tube-wells has not been taken up for implementation for want of power drill, the President was asked to persuade the ryots to utilise the loan facilities available under the Sub-Artesian Wells Scheme.